நாள்: 16.07.2026

HMOP 242/2021 JTW OP 134/2012

பெயர் பழனியம்மாள்

ம.சா.1

<u>**குறுக்கு விசாரணை**</u>

நான் ஆண்டிபட்டி மகளிர் காவல் நிலையத்தில் என் கணவர் மீது அவர் என்னை வரதட்சனை கேட்டு கொடுமைப்படுத்தினார் என புகார் னெகாடுத்து அதன் அடிப்படையில் குற்ற எண். 11/2007 ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்ல செய்து அது சம்பந்தமான பட்டிகை வழக்கு எண். 209/2007 என்ற குற்ற வழக்கு ஆண்டிபட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நடந்தது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் என் கணவர் தேனி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் CA 39/2010 ல் என் கணவர் 05.10.2010 ல் விடுதலை செய்யப்பட்டார் என்றால் சரியல்ல. நான் என் கணவர் மீது ஜீவனாம்சம் கோரி உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் MC 9/2008 வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு அடிப்படையில் 2010 ல் இருந்து ஜீவனாம்சம் பெற்று வந்தேன் என்றால் சரிதான்.

என் கணவர் அதற்கு பின்னர் OP 134/2012 என விவாகரத்து மனுவை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். என் கணவர் தாக்கல் செய்த விவாகரத்து வழக்கில் 08.01.2013 ம் தேதி வழக்கறிஞர் வைத்து ஆஜராகினார் என்றால் சரிதான். நான் ஜீவனாம்ச வழக்கில் 2018 வரை தொடர்ந்து ஜீவனாம்ச தொகை வாங்கி வந்தேன். 2014 ம் ஆண்டு ஒருதலைப்பட்சமாக உத்தரவு என் கணவர் தாக்கல் செய்த விவரகத்து மனுவில் வழங்கியது என்றால் சரிதான். நான் தொடர்ந்து 10 ஆண்டுகள் ஜீவனாம்சம் பெற்று வந்த நிலையில் இந்த வழக்கு நடவடிக்கையை தெரியாது என சொல்வது ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல. நான் என் கணவருடன் சேர்ந்து வாழ வேண்டும் என நினைத்திருந்தால் வரதட்சனை கொடுமைக்காக புகார் கொடுததிருக்க மாட்டேன் என்றால் சரியல்ல. என் கணவரின் சொத்தை அடையவேண்டும் என்பதற்காக நான் என் கணவர் மீது பொய்யாக சேர்ந்து வாழ வேண்டும் என இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆதனால் என் கணவர் தாக்கல் செய்துள்ள விவாகரத்து மனுவை அனுமதித்து, நான் சேர்ந்து வாழ வேண்டும் என தாக்கல் செய்துள்ள விவாகரத்து மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.07.16 18:18:34 +0530

சார்பு நீதிபதி

உத்தமபாளையம்